MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME - II ISSUE - 1 AUG -2024
E-ISSN : 2584 - 1238

# குறிஞ்சி நிலமும் நிலம் சார் தொழில்களும்

**உ.ச.எ.முகிலன்,**
உதவிப் பேராசிரியர்,தமிழ்த்துறை,
சைவ பானு சத்திரிய கல்லூரி,அருப்புக்கோட்டை.

DOI 10.5281/zenodo.12750731.

**Abstract :**

**Primitive man ate natural foods. He hunted animals. He was engaged in working, eating and gathering food. Labor is the cause of culture-making thought. The method of obtaining food through labor became industries. They engaged themselves in industries for food and to fulfill their basic needs. In this way, this article examines the seasonal occupations undertaken by the people of Kurinji.**

**Key Words : Natural Food - Kurinji Land - Cultural Making**

ஆதிகால மனிதன் இயற்கை உணவுகளை உண்டான். விலங்குகளை வேட்டையாடி உண்டான். உழைத்து உண்பதிலும் உணவுப் பொருட்களைச் சேகரிப்பதிலும் ஈடுபட்டான். உழைப்பே பண்பாட்டு உருவாக்கச் சிந்தனைக்குக் காரணமாக அமைந்தது. உழைப்பு மூலம் உணவு பெறும் முறை, தொழில்களாக ஆகின. உணவுக்காகவும் அடிப்படை தேவைகளை நிறைவு செய்தற் பொருட்டும் தொழில்களில் தங்களை ஈடுபடுத்தலாயினர். அவ்வகையில் குறிஞ்சித் திணை மக்கள் மேற்கொண்ட பருவ காலங்கள் சார்ந்த தொழில்களை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

தொழில்கள் என்பது வருவாய் ஈட்டுதல், முறையாகச் செலவிடுதல், எதிர்காலத் தேவைக்கென சேமித்து வைத்தல் என நிகழ்த்தப் பெற்றன.

நிலத்தின் தன்மைக்கேற்பவும், திணை சார்ந்தும் தொழில்கள் நடைபெற்றன. மாற்றம் பெற்றன. ஒவ்வொரு திணை சார்ந்தும் விளைந்த பொருட்களைப் பிறிதொரு திணைக்குக் கொண்டு சென்று விற்று, பண்டப் பரிமாற்றம் செய்து அக்கால மக்கள் வாழ்ந்தனர். அன்றாடத் தேவைக்கும் பிற்காலத் தேவைக்கும் உழைத்தனர்.

இயற்கையோடு இயைந்து தொழில் செய்தனர். நிலமே முதன்மைக் காரணியாக அமைந்தது. நிலத்தின் தன்மைக்கேற்ப ஆறுவகைப் பருவ காலங்களை உணர்ந்தனர். பொழுதின் வழித் தொழிலை மேற்கொண்டனர். பருவ காலம், தாம் வாழும் சூழலுக்கு ஏற்பத் தொழில்களை மேற்கொண்டனர். சங்க காலத்தில் நிலங்கள் ஐந்திணைகளாகப் பகுக்கப்பட்டிருந்தன.

ஐந்திணைகளிலும் வாழந்த மக்கள் இயற்கைச் சூழலுக்கு ஏற்ப அவரவர் தொழில்களை மேற்கொண்டனர். உழவுத் தொழில் தன்னிறைவு பெற்ற தொழிலாக இருந்தது. முத்துக் குளித்தல், சங்கெடுத்தல், உப்பு விளைவித்தல், மீன் பிடித்தல், நெசவுத் தொழில், தச்சுத் தொழில், தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல், ஆநிரை மேய்த்தல், எனப் பல


http://Creativecommons.org//license/by/4.0/.

வகையாகத் தொழில்களை மேற்கொண்டு வந்தனர். அதாவது, அந்தந்த நிலத்திற்கும், பருவ காலநிலைக்கும் ஏற்றவாறு தொழில்களை மேற்கொண்டு வந்தனர்.

**குறிஞ்சி:**

மலையும் மலை சார்ந்த நிலமும் குறிஞ்சி. வேட்டைத் தொழிலை மேற்கொள்ளும் மக்கள் வாழும் நிலமாகக் குறிஞ்சி நிலம் காணப்படுகிறது. தொல்காப்பியம் குறிஞ்சி நிலத்தினை மலையும் மலை சார்ந்த இடமும் என வரையறுக்கின்றது. இந்நிலத்தின் முதன்மைக் குடிகளாகக் கருதப்படுவோர் குறவன், குறத்தி, வெற்பன் ஆவர். குறிஞ்சி நிலத் தலைவன் வெற்பன், பொருப்பன், சிலம்பன் எனப் பெயர் பெற்றான். தலைவி கொடிச்சி எனப் பெயர் பெற்றாள்.

**வேட்டைத் தொழில்:**

குறிஞ்சி நில மக்கள் வேட்டைத் தொழிலை முதன்மையாகக் கொண்டிருந்தனர். வேட்டையாடி உணவுத் தேவையை நிறைவு செய்தனர். வேட்டையின் மூலம் கிடைக்கும் விலங்கின் இறைச்சியைப் பகிர்ந்து உண்டனர். இதனை,

**“கானவன் எய்த முளவுமான் கொழுங்குறை**
**தேங்கமழ் கதுப்பின் கொடிச்சி மகிழ்ந்துகொடு**
**காந்தளமஞ் சிறுகுடிப் பகுக்கும்**
**ஓங்குமலை நாடன்நின் நசையி னானே” (நற்.85: 8-11)**

எனும் நற்றிணைப் பாடல் எடுத்துரைக்கிறது. முளவுமான் என்னும் முள்ளம்பன்றியை கானவன் என்னும் மலை சார்ந்த குடியினன் வேட்டையாடினான். வேட்டையாடிய முள்ளம்பன்றியின் தசையினைச் சுட்டதையும் கிழங்கோடு உண்டதையும், வேட்டையில் கிடைத்த இறைச்சியைப் பலருக்கும் பகுத்து உண்ட செய்தியை இப்பாடல் வெளிப்படுத்துகிறது. திணைப்புனத்தின் பயிர்களை பாழ்படுத்துவதால் அதைத் தடுக்க கற்பொறிகள் வைத்தனர்.

மலைப்பகுதியில் இரவிலும், பகலிலும் வேட்டை நாய்களுடன் சென்று குறவன் வேட்டையாடியுள்ளான். இதனை அகநானூறு பதிவு செய்துள்ளது.

**“பூங்கண் வேங்கைப் பொன்னிணர் மிலைந்து**
**வாங்குகமை நோன்சிலை எடுத்தத் தரீஇத்**
**தீம்பழுப் பலவின் சுளைவிளை தேறல்**
**வீளைஅம்பின் இளையரொடு மாந்தி**
**ஓட்டியல் பிழையா வயநாடப் பிற்பட**
**வேட்டம் போகிய குறவன் காட்ட**
**குளவித் தண்டிதல் குருதியொடு துயல்வர**
**முளவுமாத் தொலைச்சும் குன்ற நாட” (அகம்.182: 1-8)**

வேங்கை மரத்தின் பூவைச் சூடிக் கொண்டு, மூங்கிலால் ஆன வளைந்த வில்லைத் தோளில் இட்டுக் கொண்டு, தம்மோடு உடன் வந்த வீரர்களோடு பலாப்பழத்தின் சுளையில் செய்த தேன் குடித்துக் கொண்டு வேட்டை நாய்களோடு புதரில் பதுங்கியிருந்த முள்ளம்பன்றியை அம்பெய்து வீழ்த்தினான் எனக் குறிப்பிடுகின்றது. அம்பினை எய்தும் மானைக் கொன்றும் வேட்டைத் தொழிலை மேற்கொண்டுள்ளனர். இதனை,


http://Creativecommons.org//license/by/4.0/.

**“தீண்டலும் இயைவது கொல்லோ மாண்ட**
**வில்லுடை வீளையர் கல்இடுபு எடுத்த**
**நனந்தலைக் கானத்து இனம்தலைப் பிரிந்த**
**புன்கண் மடமான் நேர்படத் தன்னையர்**
**சிலைமாண் கடுவிசைக் கலைநிறத்து அழுத்திக்**
**குருதியொடு பறித்த செங்கோல் வாளி” (குறுந்.272: 1-6)**

வேட்டையின் போது சீழ்க்கை ஒலி எழுப்பியதையும், கொன்று விலங்குகளைக் கல்லால் மூடி வைத்ததையும் குறிப்பிடுகின்றது.

நிலத்தில் குழிதோண்டி அதில் விலங்குகளை விழச் செய்து, அவற்றைப் பிடித்துக் கொன்று உணவாக்கினர்.

மழையில்லாத நிலையில் தண்ணீருக்காகக் குழிகள் தோண்டப்பட்டிருக்கும். மானின் கால்தடம் இருக்கும் பகுதியல் குழிகளைத் தோண்டி, அருகே மறைந்து ஒருங்கி இருப்பர். நடுஇரவில் வளைந்த கொம்பினை உடைய பன்றிகள் நீர் அருந்த வரும் எனக் காத்திருப்பர். பனிறகள் வராவிட்டால் பசுமையான தூர்களை அறுத்து வேலிகளில் மாட்டி வலைகட்டி வைத்தனர்.

புதர்களில் இருந்து வரும் குறுமுயல்கள் வலைகளில் மாட்டி அகப்பட்டுக் கொள்ளும். அகப்பட்ட முயலைப் பிடித்து உண்பர் என குறிஞ்சி நில மக்களின் வேட்டைத் தொழில் செய்தனர். குறிஞ்சி நிலம் மழையின்றி வறண்டு போன கடுமையான வெப்பக் காலத்தில் பன்றிகளையும், முயல்களையும் பகற்பொழுதிலும், இரவுப் பொழுதிலும் வேட்டையாடி உள்ளதை அறிய முடிகிறது.

வலை வைத்து விலங்குகளைப் பிடிப்பவர்கள் விலங்குகளின் சோர்வினைக் கண்டுணர்வதில் சிறந்தோராக இருந்துள்ளனர். இதனை,

**“………………….பையென**
**வலைவர் போல சோர்பதன் ஒற்றி” (கலி.55: 16-17)**

என்னும் பாடலடி குறிப்பிடுகின்றது. வேட்டை முடிந்து வந்து உறங்கும் வேட்டுவன் என்றும் முஞ்ஞை கொடியோடு முசுண்டைக் கொடியும் வளர்ந்து பலர் உறங்கும் பந்தலாய்க் காட்சி தருகின்றது. பந்தலின் நிழலில் யானையை வேட்டையாடுபவன் உறங்குதலை

**“முன்றின் முஞ்ஞையொடு முசுண்டைப் பம்பிப்**
**பந்தர் வேண்டாப் பலர்த்தூங்கு நீழற்**
**கைம்மாண் வேட்டுவன் கனைதுயின் மடிந்தெனப்” (புறம்.320: 1-3)**

எனப் புறநானூறும் பகலிலும் இரவிலும் வேட்டைத் தொழில் நிகழ்ந்ததைப் பற்றிக் கூறுகிறது.

**தினைப்புனம் காத்தல்:**

தினைப்பயிர் விளைவித்தல் குறிஞ்சி நிலத்தில் காணப்படுகிறது. தினைப்புனம் காத்தல் அதாவது தினைக் கதிர்களை உண்ண வரும் பறவைகளை பெண்கள் பகற்பொழுதினில் விரட்டும் தொழிலை மேற்கொண்டனர். சங்கப் பாடல்கள் இதனை வெளிப்படுத்துகின்றன.


http://Creativecommons.org//license/by/4.0/.

வேட்டையாடிய குறவர்கள் பயிர்த்தொழில் செய்வதில் ஈடுபட்டனர். தொடக்கநிலையில் பயிர்த்தொழில் பற்றி ஏதும் அறியாத நிலையிலேயே இருந்தான். நிலத்தில் கிடக்கும் கிழங்குகளைத் தின்பதற்காகப் பன்றிகள் மண்ணைத் தோண்டிக் கிளறிப் புழுதியாக்கி இருந்தன. அவ்வாறு புழுதியாக்கப்பட்ட இடத்தில் கானவர் மழைக்காலத்தில் தினை விதைத்தனர். பன்றிகள் கிளறிய மண்ணில் விதை விதைத்தமையை,

**"கடுங் கண் கேழல் உழுத பூழி**
**நல்நாள் வரு பதம் நோக்கி குறவர்**
**உழாஅது வித்திய பருஉக் குரற் சிறு தினை" (புறம்.176: 1-3)**

எனப் புறநானூற்றுப் பாடல் அடிகள் குறிப்பிடுகின்றன. கிழங்குகளைத் தன் இனத்தோடு கூடிப் பன்றிகள் கிளறின. பன்றிகள் கிளறிய அச்செயல் உழுதது போலத் தென்பட்டன. அதில் குறவர்கள் சிறுதினையை நல்ல நாள் பார்த்து உழாமலே விதைத்தனர். பெரிய தோகையுடன் சிறுதினை முளைத்து வளர்ந்தது. அதாவது உழுது விதைத்தல் வழக்கத்தை அக்கால மக்கள் தொழிலாகக் கொண்டிருந்தனர் என்பதையும், உழுவதற்கு நல்ல நாள் பார்த்து விதைக்கும் வழக்கம் இருந்ததை அறிய முடிகிறது. இன்றும் வேளாண்மை செய்யும் உழவர்கள் நல்ல நாள், நேரம் பார்த்து உழவுத் தொழில் மேற்கொள்வதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். இதனை, ஆடிப்பட்டம் தேடி விதை என்னும் பழமொழியும் நினைவுபடுத்துகிறது.

**"கேழ லுழுதெனக் கிளர்ந்த வெருவை**
**விளைந்த செறுவிற் றோன்று நாடன்" (ஐங்.269: 1-2)**

என்ற ஐங்குறுநூற்றுப் பாடலிலும் பன்றிகள் கிளறிய மண்ணில் குன்ற நாடன் தினை விதைத்தமை கூறப்படுகிறது. ஐவன நெல்லும் தினையும் பயிரிட்டனர். அது வளர மழையும் பெய்தது பற்றி

**"கரிபுனம் மயக்கிய வகன்கட் கொல்லை**
**ஐவனம் வித்தி மையுறக் கவினி**
**ஈனம் செல்லா வேனற் கிழுமெனக்**
**கருவி வானந் தலைஇ யாங்கும்" (புறம்.159: 16-19)**

என்னும் புறநானூற்றுப் பாடல் எடுத்தியம்புகிறது. காட்டை எரித்து வேளாண் நிலமாக மாற்றினர். நெல்லும் தினையும் விதைத்தனர். கோடை காலத்தில் கதிர் வாங்காமல் தினை வாடியது. வானம் இடியோடு மழையைத் தருவித்தது. பகலிலும் இரவிலும் தினையைப் பாதுகாப்பது ஒரு தொழிலாக நிகழ்ந்திருக்கிறது. அத்தொழிலில் ஆண்களும், பெண்களும் ஈடுபட்டிருக்கின்றனர்.

குறிஞ்சி நிலத்தில் தினை விதைத்து அறுவடை செய்வதே முதன்மைத் தொழிலாக இருந்திருக்கின்றது. ஆண்களும் தினைப்புனம் சென்று காவல் காத்திருக்கின்றனர். தினை காக்கும் பொருட்டு பன்றிகள், யானைகளை வில்லால் வீழ்த்தியும் பறை அடித்து விரட்டியும் தினைப்புனம் காத்தலை,

**"மலையயல் கலித்த மையார் ஏனல்**
**துணையின் தீர்ந்த கடுங்கண் யானை**
**அணையக் கண்ட அங்குடிக் குறவர்**
**கணையர் கிணையர் கைபுனை கவணர்**


http://Creativecommons.org//license/by/4.0/.

**விளியர் புறக்குடி யார்க்கும் நாடே" (நற்.108: 1-5)**

என நற்றிணை எடுத்தியம்புகிறது. பகல்பொழுதிலும் இரவுப் பொழுதிலும் தினைப்புனம் காக்கப்பட்ட செய்தியும், பறை முழக்கி கிளிகளை விரட்டிய செய்தியையும் அறிய முடிகிறது. தலைவி தினைப்புனத்திற்கு காவல் சென்றதை,

**"ஏனக் காவலின்" (நற்.128: 7)**

தலைவி தினைப்புனம் சென்றுள்ளதைத் தாய் கூறுவதாக,

**"சிறு களி கடிகம் சென்று" (நற்.288: 9)**

தினைப்புனம் காக்க தட்டை என்னும் கருவி கொண்டு சென்றதை

**" ……………………..கொடிச்சி**

**அவ்வாய் தட்டையொடு அவணை ஆக என" (நற்.134:4-5)**

போன்ற பாடல் அடிகள் தலைவி தினைப்புனம் காத்த செய்தியைக் குறிப்பிபடுகின்றன. தினைப்புனம் காக்கும் தலைவி கிளி விரட்டும் செயலை,

**"பெரும் புனம் கவரும் சிறுகிளி ஓப்பி" (நற்.368: 1)**

என்ற பாடல் வரி எடுத்தியம்புகிறது.

பரண்மேல் அமர்ந்து தினைப்புனம் காத்தமையை,

**"பாவமை இதணம் ஏறிப்பாசினம்**

**வணர்குரல் சிறுதினை கடிய" (நற்.373: 7-8)**

என்னும் பாடல் அடி குறிப்பிடுகிறது.

தினைப்புனத்தில் நாள்தோறும் கிளிவிரட்டும் தொழிலைத் தலைவி மேற்கொண்ட செயல் குறித்து

**"இனக் கிளியாம் கடிந்து ஓம்பும் புனத்து அயல்" (கலி.37: 13)**

என்ற பாடலடி எடுத்துக் கூறுகிறது. தோழியும் தலைவியும் காவலில் ஈடுபட்டிருந்ததை அகநானூறு எடுத்தியம்புகிறது.

**"…இவளும் யானம் காவல் கண்ணினம் தினையே"**

**(அகம்.92: 6-7)**

தோழி கிளிகடிதல் பற்றிக் கூறியதாக,

**"படிகிளி கடிகம் சேறும்" (குறுந்.198: 5)**

என்ற பாடலடியும் வெளிப்படுத்துகின்றன. கொடிச்சியாகிய தலைவி தினைப்புனம் காவல் புரிவதை,

**"பிறங்கு குரல் இறடி காக்கம் புறம் தாழ்**

**அம் சில் ஓதி அசைஇயல், கொடிச்சி" (குறுந்.214: 2-3)**

எனக் குறுந்தொகை உணர்த்துகின்றது.


http://Creativecommons.org//license/by/4.0/.

தினைப்புனம் காக்கும் பகலில் மட்டுமே பெண்களால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இரவுப் பொழுதில் அச்சம், விலங்குகளால் ஏற்படும் இடர், ஆபத்து கருதி பெண்கள் அதாவது தலைவி, தோழியர் பகலில் மட்டுமே தினை காக்க அனுப்பப்பட்டிருக்கின்றனர். இதனை,

**"தினை கிளி கடிதலின் பகலும் ஒல்லும்"** (குறுந்.217: 1)

என்ற பாடலடி சுட்டுகின்றன. குறிஞ்சி நில பெண்கள் பகற்பொழுதில் காலம் சார் தொழிலாக இத்தினைப்புனம் காத்தல் அமைந்திருக்கின்றது.

**"தழலும் தட்டையும் முறியும் தந்து இவை**

**ஒத்தன நினக்கு"** (குறுந்.223: 4-5)

தட்டையினை அடித்தும் தழலினைச் சுழற்றியும் கிளி விரட்டும் தினைப்புனம் காத்தல் தொழிலை பகல்பொழுதில் மேற்கொண்டிருந்தனர் என்பதை அறிய முடிகிறது,

"கருவிகள் இல்லாமல் தினைப்புனத்தில் கதிரைத் தின்னவரும் யானையினைப் பாடல் பாடியே அதை மெய்மறக்கச் செய்து தின்ன விடாமல் செய்த குறவனின் மனைவியின் தொழில் பற்றி,

**"பைது வரல் அசைவளி யாற்றுக் கைபெயரா**
**ஒலியல் வார்மயிர் ஊரினள் கொடிச்சி**
**பெருவரை மருங்கில் குறிஞ்சி பாடக்**
**குரலுங் கொள்ளாது. நிலையினும் பெயராது**
**படாஅப் பைங்கண் பாடுபெற்று..."** (அகம்.102: 4-8)

என்று அகநானூற்றுப் பாடல் குறிப்பிடுகின்றது. குறிஞ்சிப் பண் பாடிய பெண்ணின் குரலில் மயங்கிச் சென்ற யானையின் நிலை பற்றிக் கூறப்படுகிறது.

தலைவன் தலைவியோடு தினைப்புனத்திலிருந்து காவல் செய்ததை,

**"நம்மொடு சிறுதினை காவல னாகி"** (ஐங்.230: 1-2)
**"செந்தார்க் கிள்ளை நம்மொடு கடிந்தோன்"** (அகம்.242: 6)

என்ற பாடல் அடிகளும், தலைவனோடு சேர்ந்து தலைவியும் தோழியும் கிளி விரட்டுதலை

**"சிறுதினைப் படுகிளி எம்மொடு ஓப்பி"** (அகம்.308: 10)

என்ற பாடல் அடிகளும் சுட்டுகின்றன. மயில்களைத் தின்ன விடாமல் குறிஞ்சி நிலத் தலைவி பயிர் காத்தல் செய்ததை,

**"கொடிச்சி காக்கும் பெருங்குர லேனல்**

**கடுக்கண் மஞ்ஞை கவரு நாட"** (ஐங்.296: 1-2)

என ஐங்குறுநூறும், தினை அறுவடை செய்யும் காலங்களில் தோழியும் தலைவியும் குடும்பத்தினருடன் ஈடுபட்டிருந்ததை,

**"கொயல் தொடங் கினரே கானவர் கொடுங்குரல்**


http://Creativecommons.org//license/by/4.0/.

**சுலவுப் பொறை இறுத்த கோல்தலை இருவி''** (நற்.306: 5-6)

என நற்றிணையும் குறிப்பிடுகிறது.

சிறுகுடியினா் மலை நெல் விதைத்தனா். பின் அதனுள் வளா்ந்துள்ள களையினைப் பறித்து எறிந்தனா். களை பறித்தல் பணியைப் பெண்கள் செய்தனா் என்பதை,

**"அருவிப் பரப்பின் ஐவனம் வித்திப்**
**பருவிலைக் குளவியொடு பசுமரல் கட்கும்**
**காந்தள் வேலிச் சிறுகுடி பசித்தென''** (குறுந்.100: 1-3)

எனக் குறுந்தொகை எடுத்தியம்புகிறது.

தினைக்கதிா் தின்னவரும் யானைகளைக் கவண்கல் கொண்டு விரட்டும் பணியை ஆண்கள் செய்ததை,

**"இடியுமிழ் டிரங்கிய விரவுபெயல் நடுநாட்**
**கொடிவிடு பிருளிய மின்னுச்செய் விளக்கத்துப்**
**பிடியொடு மேயுஞ் செய்புன் யானை**
**அடியொதுங் இயங்கங் கேட்ட கானவன்**
**நெடுவரை ஆசினிப் பணவை யேறி**
**கடுவிசைக் கவணையிற் கல்கை விடுதலின்**
**இறுவரை வேங்கையின் ஒள்வீ சிதறி''** (கலி.41: 5-11)

எனக் கலித்தொகை குறிப்பிடுகிறது. புன்செய் நிலந்தனில் ஆண்யானை, தன் பிடியுடன் வந்து தினைக்கதிா் உண்ணத் துவங்குகிறது. அவற்றின் காலடிச் சத்தம் கேட்கிறது. கானவன் உயா்ந்த பரண் மேல் ஏறுகிறான். கடுமையான வேகத்துடன் கவண் கல்லை எறிகிறான் என யானை விரட்டப்பட்ட செயல் கூறப்பெறுகிறது.

இவ்வாறு குறிஞ்சி நிலம் சாா் தொழில்களில் தினைப்புனம் காக்கும் தொழிலில் பகற்பொழுதில் பெண்களை ஈடுபடுத்தினா் என அறியமுடிகிறது.

தினைப்புனத்தில் விதைத்தல், களை பறித்தல், அறுவடை செய்தல் எனத் தொழில் படிநிலைகள் காணப்படுகிறது. இருப்பினும் தலைவி, தோழி, தாய் என யாவரும் கிளி, மயில், குருகுப் பறவை விரட்டுதலைப் பெண்கள் தொழிலாக மேற்கொண்டனா் என்பதை அறிய முடிகிறது,

தினை விதைத்தல், பாதுகாத்தலில் ஆண்களும் பெண்களும் ஈடுபட்டதையம், பன்றிகள் கிளறிய மண்ணில் பகல்பொழுதில் உழவுத் தொழில் நடைபெற்றதையும், திருமண காலத்திற்கு முன்பு தினைப்புனம் காத்தல் தொழிலைப் பெண்கள் மேற்கொண்டுள்ளதையும் இதன் வாயிலாக அறிய முடிகிறது.

**தேனெடுத்தல்**

குறிஞ்சி நிலத்தில் மரங்கள் செறிந்து காணப்படுவதால் தேன் மிகுந்து காணப்படுகிறது. எனவே மலைப்பகுதியில் தேனெடுத்தலை இயல்பான தொழிலாகக் கருத முடிகிறது. குறிஞ்சி நில மக்கள் தேனெடுக்கும் தொழிலில் ஈடுபட்டனா். தேன் என்பது மலையின் வளத்தினைக் குறிக்கும்.


http://Creativecommons.org//license/by/4.0/.

தேன் சிறந்த உணவுப்பொருளாகும். பூக்கள் பூக்கும் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் தேன் உற்பத்தி அதிக அளவில் இருக்கும். இளவேனில் தொடக்க காலத்தில் வேப்ப மரம், வேங்கை மரம் தன் பூக்களை அதிக அளவில் துளிர்க்க விடுகின்றன. அவ்வாறு பூக்கள் பூக்கின்ற நேரத்தில் தேனீக்கள் தேனை உண்டு மகரந்தச் சேர்க்கைக்கும் வழிவகை செய்கின்றன.

தேன் சிறந்த உணவுப் பொருள் என்பதனை வண்டுகள் உண்ணுமாறு மலர்ந்த கரிய அடிப்பகுதியைக் கொண்ட வேங்கை மரத்தின் பெரிய கிளையிலே தேனீக்கள் மொய்த்தலால் தேன் கசிந்து கல்லின் குழிகளிலே வடியும். குறவர்களின் இளமகளிர் அதனை வழித்துண்பர். அவர் உண்டது போக எஞ்சியதை மெல்லிய தலையுடைய மந்தியின் வலிய குட்டிகள் சென்று உண்ணும் என்பதை,

**"சுரும்பு உண விரிந்த கருங் கால்வேங்கைப்**
**பெருஞ் சினைத் தொடுத்த கொழுங்கண் இறாஅல்,**
**புள்ளுற்றுக் கசிந்த தீம்தேன் கல் அளைக்**
**குறக் குறுமாக்கள் உண்ட மிச்சிலைப்**
**புன் தலை மந்தி வன் பறழ் நக்கும்" (நற்.168: 1-5)**

என்ற பாடல் விளக்குகிறது,

மலையின் பக்கத்தில் உள்ள தேனடைகளை எடுப்பதற்குக் கண்ணேணி மற்றும் தமாலம் என்னும் கொடியினைப் பயன்படுத்தி ஏறியுள்ளனர் என்பதனை,

**"நெடுந் தண் ஆரத்து அலங்கு சினை வலந்த**
**பசுங் கேழ் இலைய நறுங் கொடித் தமாலம்**
**தீம் தேன் கொள்பவர் வாங்குபு புரியும்" (நற்.292: 1-3)**

என்ற நற்றிணைப் பாடலடிகளும்,

**"வானூர் மதியம் வரைசேரின் அவ்வரைத்**
**தேனின் இறாலென ஏணி இழைத்திருக்குங்**
**கானகல் நாடன் மகன்" (கலி.39: 8-10)**

எனக் கலித்தொகைப் பாடலும் தேன் எடுக்கும் தொழில் பற்றிய செய்திகளை எடுத்தியம்புகின்றன.

**கிழங்கு பயிரிடுதலும் அகழ்தலும்**

மலைப் பயிர்களில் முதன்மையானதாகக் கிழங்கு காணப்படுகிறது. கிழங்கு பயிரிட்டு அகழ்தலை சங்ககால குறிஞ்சி நில மக்கள் தொழிலாக மேற்கொண்டுள்ளனர்.

கவலைக் கிழங்கு, வள்ளைக் கிழங்கு. பனங்கிழங்கு, நூற்கிழங்கு, சேமக்கிழங்கு, போன்றவை உணவாகப் பரிமாறப்பட்ட செய்தி சங்கப் பாடல்களில் காணக் கிடைக்கின்றன.

கிழங்கு அகழ வெட்டப்பட்ட குழி, முதலில் அகழ்ந்தவர்க்கு உரித்தாகும். அவ்வாறு அகழ்ந்த குழியில் பிறர் அகழாமையும் குறிஞ்சி நில மக்களிடம் காணப்படும் இயல்பாகும். இவ்ஒழுங்கு முறையினைக் காணும்போது குறிஞ்சி


http://Creativecommons.org//license/by/4.0/.

நிலமக்களுக்கு கிழங்கு உணவு இயற்கையாகவே எல்லா பருவ நிலைகளிலும் மலைகளில் கிடைக்கப்பெற்ற உணவுப் பொருளாக இருந்துள்ளதை அறிய முடிகிறது.

கானவன் அகழ்ந்த குழியில் கிழங்கு முற்றாமை கண்டு, பிற்றை நாள் அகழ்ந்ததை,

**"குன்றத்துப்**

**பழங்குழி அகழ்ந்த கானவன் கிழங்கினொடு" (குறுந்.379: 1-2)**

என்ற பாடலில் கானவன் உரிமை வைத்து அகழ்ந்து கொண்ட பழைய குழியினைத் தோண்டி தேவையான கிழங்கு பெற்றுக் கொண்டான் என்பதை அறிய முடிகிறது.

பன்றிகள் ஆழ்ந்து எடுக்கும் குழிகளில் கானவர் விதை விதைத்தலை

**"கிழங்ககழ் கேழ லுழுத சிலம்பில்" (ஐங்.270: 1)** என ஐங்குறுநூறு சிறப்பிக்கின்றது. கானவர் கிழங்கு அகழ்வதற்கு நெடுங்குழி தோண்டிய செய்தியினையும் ஐங்குறுநூறு,

**"கானவர் கிழங்ககழ் நெடுங்குழி மல்க வேங்கை"**

**(ஐங்.208: 1-2)**

எனக் குறிப்பிடுகின்றது.

**"மூன்றே கொழுங்கொடி வள்ளிக் கிழங்கு வீழ்க்குமே"**

**(புறம்.109: 6)**

எனப் புறநானூறும் கிழங்கு எடுக்கும் தொழில் பற்றிக் குறிப்பிடுகின்றது.

**முடிவுரை**

இவ்வாறாக குறிஞ்சி நிலத்தில் காலம் சார்ந்த தொழில்களாக வேட்டையாடுதல், தினை விதைத்தல், பாதுகாத்தல், அறுவடை செய்தல், தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல் என நான்கு தொழில்களே முதன்மைத் தொழில்களாக இருந்துள்ளமையையும் பெரும்பாலும் இத்தொழில்களில் வேட்டையாடுதல் மட்டுமே பகல், இரவுப் பொழுதில் நடைபெற்றுள்ளதையும், பிற தொழில்கள் பகல் பொழுதிலே நிகழ்ந்துள்ளதையும் இக்கட்டுரை வாயிலாக அறிய முடிகிறது.

**துணை நின்ற நூல்:**

1. பதிப்பாசிரியர் முனைவர் ச.வே.சுப்பிரமணியம், சங்க இலக்கியம் மூலம் முழுவதும், மணிவாசகர் பதிப்பகம், தியாகராயர் நகர்,சென்னை


http://Creativecommons.org//license/by/4.0/.